முருகப்பெருமான் துணை

**மகான் சுக்கிர பகவானை தொடர்ந்து**
**மகான் சனிபகவான் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

27.06.2021, ஞாயிற்றுக்கிழமை

1. அன்னதான வள்ளலே அரங்கா
அருட்பெருஞ் சக்தியே தேசிகா
மண்ணுலகை மீட்க வந்த
மாதவசியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் பிலவ மிதுனதிங்கள்
வரமென முன்னான்கோர் திகதி கதிர்வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 13ம் நாள், 27.06.2021 ஞாயிற்றுக்கிழமை)
வழங்குவேன் யோகபிரசன்ன ஆசி
3. ஆசியை சனி பகவான் யானும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
ஆசிதந்து அரங்கன் காப்புதனை
அடைந்த மக்கள் எல்லாம் உலகில்
4. உலகில் பேரிடர்வழி வரும்
உபாதை துன்பங்களை வெல்வர்
கலகம் கெட்டகுணம் போன்ற
கண்ணியமில்லா செயல்வழி பாதகம்
5. பாதகங்களை எல்லாம் வென்று
பணிந்து அரங்கன் ஞானமெனும்
பாதைவழி வந்து உலகோர் சிறப்பர்
பாவகரும வினையோடு தொடரும்
6. தொடரும் அட்டமம் நாட்டவனெனும்
தொல்லை தரும் என் தாக்கமும்
இடரின்றி கடப்பர் சிறப்பர்
இறைஞானி அரங்கன் தயவு கொண்டவர்கள்
7. கொண்டதொரு அரங்கன் நாமம்
குறையிலா நித்தம் செபித்து
தொண்டுவழி இணைந்தவர்கள்
தொண்டராகி கலந்தவர்கள் எல்லாம்
8. எல்லோரும் வறுமைபசி பிணி
ஏவல் வஞ்சம் சத்ரு ருணம்
அல்லல்களை வென்று மீள்வர்
ஆபத்தான வாகன கண்டமிலா
9. கண்டமிலா சர்வ பாதுகாப்பும்
கண்டு உயர்வர் தேறுவர்
தண்டம் பணமுடை இழப்பு
தேட்டு நலிவு சோடை இல்லா

10. சோடையிலா காப்பும் மீட்பும்
சிவராஜயோகி தேசிகன் அருளால்
தடையின்றி கண்டு சிறப்பர்
தவசி காட்டும் சைவ நெறிமுறை

11. நெறிமுறை மக்கள் கடைபிடிக்க
நீதிமான்கள் ஞானவான்கள் படை
பேருலகம் எங்கும் அமைந்து சிறக்கும்
பெருமை மிக்க ஞான ஆட்சி மலரும்
யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

ஏழரை சனி மற்றும் அட்டம சனி உள்ளவர்களுக்கும் நமக்கு பிறர் செய்கின்ற ஏவல் பில்லி சூண்யங்களாலும் இடையூறு வராதிருக்க வேண்டும் என்றாலும், வாகனங்களால் விபத்து போன்ற இடையூறுகளும் வராதிருக்க வேண்டும் என்றாலும். உயிர் கொலை தவிர்த்து, புலால் மறுத்து சுத்த சைவ உணவை மேற்கொண்டு தினமும் காலை மாலை ஒரு **5** நிமிடமேனும் **ஓம் முருகா** என்றோ **ஓம் சரவண ஜோதியே நமோநம** என்றோ மந்திர ஜெபத்தினை சொல்லி வருவதுடன் வாரம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கேனும் அன்னதானம் செய்து வரவேண்டும்.

இப்படி செய்து வர வர அவர்களுக்கு உண்டான ஏழரை சனியாலும் அட்டமத்து சனியாலும் இடையூறு வராமல் சனிபகவானே அவர்களுக்கு பாதுகாப்பாய் மாறிடுவார். என்றும் அவர்களுக்கு விபத்துகள் உண்டாகாது, ஏவல் பில்லி சூண்யத்தினால் எந்த பாதிப்பும் வராது என்பது சனிபகவானின் வாக்காகும்

**ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி என்போம்! வெற்றி பெறுவோம்!!**